C.C 15/15
PW 3
பெயர் மூர்த்தி
தேதி 05.12.2020

<u>சாட்சி மனுவின் பேரில் மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

அசா1 மூர்த்திக்கு வர்த்தமான லெட்டர் எழுதிக்கொடுக்கவில்லை. கிரி என் மீது சப்கோர்ட் தேனியில் ஒரு வழக்கு தொடர்ந்து அது தற்போது நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அசா1 எனக்கு கிரயம் கொடுத்த நிலம் சம்மந்தமான ஒரு வர்த்தமான ஒப்பந்தம் எழுதிக்கொடுத்தார் என்றால் இல்லை. எனக்கும் கிரிக்கும் எந்தவிதமான பத்திரம் மற்றும் பணபற்று ரசீது எதுவும் இல்லை என்றால் சரியல்ல. எனக்கு கிரி எந்தவிதமான பணமும் தற்போது வரை கொடுக்கவேண்டியது இல்லை என்றால் சரியல்ல. கிரி எனக்கு தரவேண்டிய பணத்தை முழுவதும் ரவியிடமிருந்து நான் பெற்றுக்கொண்டேன் என்றால் எனக்கு தெரியாது. என் மகனுக்கு தான் தெரியும். நான் அசா1க்கு வர்த்தமான லெட்டர் எதுவும் எழுதிக்கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அது சம்மந்தமாக தற்போது வரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தெரியாது.